# ஆரம்பப்பிரிவு மாணவர்களின் வினைத்திறனான கற்றலில் மீளவலியுறுத்தலின் அவசியப்பாடு.

[1]Sareefa Musthafa, [2]A.S.P.Yumna
[1,2]Department of Education and childcare, Eastern University, Sri Lanka.
asp.yumna@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்** : மீளவலியுறுத்தலானது மாணவர்கள் வினைத்திறனாக கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட தூண்டுதலாக அமைகிறது. இன்று ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு தகுந்த மீளவலியுறுத்தல்கள் வழங்கப்படாமையினால் கற்றலில் பல்வேறுபட்ட பிரச்சினைளை எதிர்கொள்கின்றனர். இவ்வாறு குடும்பத்தினைப்பிரிந்து பாடசாலைக்கு முதன்முதலாக பாடசாலைச் சமூகத்துடன் இணையும் மாணவர்களின் கற்றல் விருத்தியில் பாடசாலையும் ஆசிரியர்களும் எந்தளவு பங்களிப்பினை வங்குகின்றனர் என்பதனையும் அதனுடன் இணைந்து பெற்றோர்களின் பங்களிப்பு மற்றும் பின்னதங்கிய மாணவர்களை தொடர்ந்தும் அதே நிலையிலிருந்து மாற்றமடையச் செய்வதற்கும் கனிஸ்ட இடைநிலை வகுப்புகளில் தொடர்ந்தும் மாணவர்களை கற்றலின்பால் வழிகாட்டுவதிலும் மீளவலியுறுத்தலின் செல்வாக்கு ஆரம்பபிரிவு மாணவர்களுக்கு எந்தளவு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனைக் கண்டறியும் முகமாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான ஆய்வுப்பிரதேசமாக திருகோணமலை கல்வி வலயத்தின் குச்சவெளி கோட்டத்திலுள்ள 5 பாடசாலைகள் இலகு எழுமாற்று மற்றும் வசதி மாதிரியெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. தரம் 3 தொடக்கம் தரம் 5 வரை கல்வி பயிலும் ஆரம்ப பிரிவு மாணவர்கள் 100 பேரும், ஆசிரியர்கள் 1:5 என்ற விகிதத்தின் அடிப்படையில் 20 பேரும், 5 அதிபர்களும் மொத்தமாக 125 பேர் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எனவே ஆய்வின் சிறப்பு நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் ஆய்வு வினாக்கள் தயாரிக்கப்பட்டு ஆய்வுக் கருவிகள் உருவாக்கப்பட்டன. வினாக்கொத்தானது வெவ்வேறாகத் தயாரிக்கப்பட்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டதுடன் அதிபர்களுக்கு நேர்காணல் படிவம் வழங்கப்பட்டது. இவ்வாய்வுக் கருவிகளின் மூலம் நம்பகமும் தகுதியுமான முடிவுகள் பெறப்பட்டன. இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் பாடசாலையில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வினைத்திறனான கற்றல் விருத்தியில் மீளவலியுறுத்தலின் செல்வாக்கு குறைவாகவே காணப்படுகின்றமையை கண்டறிய முடிந்தது. இதற்கு அதிகளவான மாணவர்களின் எண்ணிக்கை ,வளங்களின் பற்றாக்குறை, பெற்றோரின் கவனயீனம், பாடசாலை செயற்பாடுகளின் திருப்தியின்மை முக்கிய காரணங்களாக அமைகின்றன. எனவே மீளவலியுறுத்தல் மூலம் ஆரம்ப பிரிவு மாணவரிடையே வினைத்திறனான கற்றலை அதிகரிப்பதற்காக மாணவர்களுக்கு பாராட்டு, பரிசில்களை வழங்கல், வருடாந்த போட்டி நிகழ்வுகள் மற்றும் பரிசளிப்பு விழாக்களை நடாத்தல், மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகள், பரிகாரக்கற்பித்தலை மேற்கொள்ளல், இணைப்பாடவிதான செயற்பாடுகள் மற்றும் தலைமைத்துவப் பயிற்சிகள் போன்ற பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை பாடசாலை மட்டத்தில் ஒழுங்கமைப்பதோடு அவற்றிற்கு


ISBN 978-624-5736-14-0

ஆசிரியர்களுடன் இணைந்து பெற்றோர்கள் செயற்படல் போன்ற விதப்புரைகள் முன்வைக்கப்பட்டன.

**திறவுச்சொற்கள்:** ஆரம்பப்பிரிவு மாணவர்கள் , மீளவலியுறுத்தல், வினைத்திறனான கற்றல்

**அறிமுகம்**

''விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்'' என்பதற்கிணங்க அறிவற்ற சமூகத்தை அறிவுடைய சமூகமாக மாற்றுவதில் கல்வியின் பங்கு அளப்பரியது. இதனால் தான் இந்த நூற்றாண்டுச் சமூகம் ''அறிவுசார் சமூகம்'' என அழைக்கப்படுகிறது. அறிவைப்பெற கற்றல், பெற்றஅறிவை காலத்திற்கு காலம் இற்றைப்படுத்திக் கொள்ளல் என்பன இந்நூற்றாண்டின் கல்வியின் பிரதான நோக்குகளாகும். இவற்றினை முன்னெடுத்து செல்ல வேண்டிய பிரதான பொறுப்பு பாடசாலைகளையே சாரும். ஏனெனின் பாடசாலைகளே ஆற்றலும் ஆளுமையும் கொண்ட சமூக உருவாக்கத்திற்கு அடித்தளமிடுகின்றன.

இதனடிப்படையில் இன்றைய காலகட்டத்தில் மாணவர்களின் வினைத்திறனான கற்றல் விருத்தியில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றுள் மீளவலியுறுத்தலானது முக்கிய பங்கினைப் பெறுகிறது. அந்த வகையில் மீளவலியுறுத்தல் என்பது. ''பொருத்தமான துலங்கல்களை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கையை முன்னெடுத்தல் அல்லது ஒரு பொருளுக்கு தூண்டலை வழங்குவதன் விளைவாக , ஒரு குறிப்பிடட் துலங்கல் மீண்டும் மீண்டும் தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்தால் அத் தூண்டலுக்கான துலங்கலை மீளவலியுறுத்தல்'' எனலாம். இது தொடர்பாக ஸ்கின்னரின் ஆய்வும் கருத்துக்களும் பிரபல்யமானவை. நாட்டின் தேசிய கல்வி இலக்கினையடையவும் மாணவர்களை பொருத்தமான நடத்தையுடையவர்களாக மாற்றியமைத்து அதனை வலுவடையச் செய்யவும் வழங்கப்படும் தூண்டியாக காணப்படும் மீளவலியுறுத்தலானது இன்றைய பாடசாலைகளில் எந்தளவு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

பிள்ளைகளினால் சிறப்பாகச் செய்யக் கூடிய செயற்பாடுகளைப் பாராட்டுவதும், அச்செயற்பாடுகளுக்கான ஆக்கமும், ஊக்கமும் வழங்குவதும் மாணவர்களை உயர்வடையச் செய்யும் வழிமுறைகளாகின்றன. மாணவர்களது செயற்பாடுகளுக்கு உடனடியாக வெகுமதி கொடுப்பது அவர்கள் தமது செயற்பாடுகளில் திருப்தி உறவும் மேலும் முன்னேற்றம் அடையவும் வழிவகுக்கும். இதனை பல ஆய்வாளர்களும் தமது ஆய்வு முடிவுகளின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர் அந்தவகையில் Blume மற்றும் பலர் 2000ம் ஆண்டில் மேற்கொண்ட ஆய்வின் முடிவினை பின்வரும் வகையில் தெரிவித்துள்ளனர். ''நேர்வலுவூட்டலானது ஒருவர் தனது எதிர்கால வாழ்வில் எதிர் கொள்ளவிருக்கும் தவறான நடத்தைகளை தவிர்க்கும் ஆற்றல் மிக்கதாக கணிக்கப்பட்டுள்ளது. மாணவர் மட்டத்திலுள்ள திறமைகளை வலுவடையச் செய்யவும் மாணவர்களை ஊக்குவிக்கவும் நேர்மீளவலியுறுத்தல் பயன்படுகிறது. மாணவர் இடத்தில் தோற்றுவிக்க விளையும் நடத்தைக்கு உடனடியாக வெகுமதி கொடுக்கும் போது அந்நடத்தையானது வலுவடைகிறது. மீளவலியுறுத்தல் வழங்கும் பொழுது மாணவர் தகுந்த

நடத்தைக்கு உரிய காலப்பகுதியில் அதாவது உடனடியாக வழங்கப்படல் வேண்டும். அத்துடன் அடிக்கடி வழங்கப்படல் அவசியமாகும். மாணவரின் வயது, தனியார் வேறுபாடுகள், அவர்களின் நிலை என்பனவும் மீளவலியுறுத்தலின் போது கவனிக்கப்பட வேண்டியனவாகும்''.

எனவே தான் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் வினையாற்றல்களை விருத்தி செய்வதில் மீளவலியுறுத்தலின் செல்வாக்கு" எனும் இவ்வாய்வானது ஆரம்பப்பிரிவு மாணவர்களின் வினையாற்றல் மேம்பாட்டிற்கு மீளவலியுறுத்தல் அத்தியாவசியமானதென்பதனை எடுத்துக்காட்டவும் ஆசிரியர்களுக்கு இவ்வாய்வானது கற்பித்தலை செவ்வனே கொண்டு செல்லவும் துணைபுரியும் என்பதாலும் , பாடசாலைகளில் எந்தளவில் பிரயோகத்திலுள்ளது என்பதனையும், அத்தகைய மீளவலியுறுத்தல் செயன்முறைகளைப் பிரயோகிப்பதனால் அல்லது பிரயோகிக்காது விடுவதனால் ஏற்படும் விளைவுகளையும் ஆராய்வதனை அடிப்படையாகக் கொண்டு குச்சவெளி கல்விக்கோட்டத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை மையமாக வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வுப் பிரச்சினை**

பாடசாலைகளில் மாணவர்கள் பாட, இணைப்பாட விதான செயற்பாடுகளில் விருப்புடன் செயற்படல் குறைவாக காணப்படல், மாணவர்களின் தனியாள் வேறுபாட்டினை இனங்கண்டு அவர்களின் இயலுமை, இயலாமை என்பவற்றிற்கமைய கற்பித்தலை மேற்கொள்ளப்படாமையும், வகுப்பறைக்கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் திறமை மிக்க மாணவர்களை மட்டும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஊக்கிவித்தல், ஆசிரியர்-மாணவர் உளத்தொலைவு, தேடியறியும் ஆற்றல், சுயசிந்தனை விருத்தி போன்றவன மிகக்குறைவாகக் காணப்படல், பாடசாலையில் இருந்து. இடைவிலகல்,கனிஸ்ட இடைநிலைப்பிரிவிற்கான வழிகாட்டல் இன்மை போன்றன அதிகரித்து வருகின்றமைக்கு பல்வேறு காரணங்கள் செல்வாக்குச் செலுத்தி இருக்கக் கூடும். அதில் மீளவலியுறுத்தலும் ஒன்றாக உள்ளது. எனவே, ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வினைத்திறனான கற்றலில் மீளவலியுறுத்தலின் செல்வாக்கு தொடர்பாக ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

**ஆய்வின் நோக்கம்**

1. மாணவர்களின் வினைத்திறனான கற்றல் விருத்தியில் மீளவலியுறுத்தலின் செல்வாக்கினை கண்டறிதல்.
2. மீளவலிறுத்தலைப் பொருத்தமான வகையில் பிரயோகிப்பதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை பகுப்பாய்வு செய்தல்.
3. ஆசிரியர்கள் மீளவலியுறுத்தல் முறைமையினைப் பின்பற்றி மாணவர்களின் வினைத்திறனை மேம்படுத்தச் செய்வதற்கான ஆலோசனைகளையும் விதப்புரைகளையும் முன்வைத்தல்.

**இலக்கியமீளாய்வு**

ஒருவரின் நடத்தையானது கற்றலின் மூலமே உருவாக்கப்படுகின்றது அல்லது மாற்றியமைக்கப்படுகின்றது என்ற கொள்கையை நடத்தைவாதம் விளக்குகின்றது. நடத்தை சார்பான பரம்பரைக் காரணிகளையோ அகத் தன்மைகளையோ இக்கொள்கை கருத்தில் கொள்வதில்லை. மனிதனின் செயல்களை அவை கட்டுப்படுத்தாது நடத்தைகள் கற்றலின் விளைவு என்பதே நடத்தைவாதிகளின் கருத்தாகும். தோண்டைக் என்பவர் விலங்கு மற்றும் மனித நடத்தைகளை தொடர்புபடுத்தி வெளிச் சூழலில் பல்வேறு தூண்டல்களுக்கு கிடைக்கும் துலங்கல்களை வைத்து மனித நடத்தைகள் மாற்றம் அடைவதைக் கூறியுள்ளார். அந்த வகையில் கற்றல் மூலமே நடத்தைகள் கற்றுக்கொள்ளப்படுகின்றன. சரியான நடத்தைகளைக் கற்றால் நல்ல விளைவுகள் ஏற்படும். தூண்டல்கள் துலங்கல்களை ஏற்படுத்தும். தூண்டல் குறைவடைந்தால் துலங்கல்களும் குறைவடையும். எனவே பொருத்தமான மீளவலியுறுத்தல் மூலம் சிறந்த நடத்தைகளை உருவாக்கலாம் என்பதே தோண்டைக்கின் கோட்பாடாகும்.

ஸ்கின்னர் என்பவர் நடத்தை திருத்தியமைப்பு அணுகு முறையைப் பிரயோகித்து ஆட்களின் பல்வேறு நடத்தைப் பிறழ்வுகளை மாற்றியமைக்கலாம் என்று குறிப்பிடுகின்றார். இவர் மனித நடத்தையை இரு விதமாகப் பாகுபடுத்துகின்றார். அவை துலங்கல்சார் நடத்தை கருவிசார் நடத்தை என்பனவாகும். துலங்கல்சார் நடத்தை என்பது குறித்த ஒரு சிறப்பான தூண்டியால் உருவாக்கப்பட்ட நடத்தையாகும். கருவிசார் நடத்தை என்பது வெளிப்படையாக புலப்படாத சில தூண்டிகள் காரணமாக உயிரியிடத்தில் வெளிப்படும் நடத்தையாகும். விரும்பிய நடத்தையை வெகுமதிகளை வழங்கி பாராட்டுவதன் மூலமும் விரும்பாத நடத்தைகளை தண்டித்தல் மூலமும் மாற்றியமைக்கலாம். எனவே, மீளவலியுறுத்தல் வாயிலாக ஒருவரின் நடத்தையைக் கட்டியெழுப்பலாம் என்பதே ஸ்கின்னருடைய நம்பிக்கையாகும்.

“நேர்மீளவலியுறுத்தலானது பிள்ளையிடத்தே தோற்றுவிக்க விரும்பும் நற்பண்புகளை வலுவடையச் செய்யும் சாத்தியப்பாட்டினை அதிகரிக்கிறது. வெகுமதியானது பிள்ளையிடத்தே மகிழ்ச்சிகரமான சூழல் நிலைமையைத்தோற்றுவிக்கிறது. கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் வெகுமதி, பரிசு, புகழுரை என்பன பிள்ளையிடத்தே விரும்பிய நடத்தையை வலுவடையச் செய்கின்றன” (Benaji, 2011) .Gershof (2002), இல் தண்டனைகள் வழங்குதல் தொடர்பாக கொலம்பியாவில் மேற்கொண்ட ஆய்வில்,உடல்ரீதியான தண்டனைகள் பிள்ளைகளைப் பலவீனப்படுத்தும் இயல்புடையனவாகவும் நடத்தைகளை ஒடுக்கும் இயல்புடையனவாகவும் காணப்படுகின்றன. தண்டனை நடத்தை மாற்றத்திற்கான ஒரு பயனுள்ள செயலாக அமையப்பெறமாட்டாது. உடல்ரீதியான தண்டனைகளும் சிறுவர்களுக்கெதிரான துஷ்பிரயோகங்களாகக் கருதப்படுகின்றன. உடல்ரீதியான தண்டனைகள் பிள்ளைகளின் நடத்தை மாற்றங்களுக்கான நம்பகத்தன்மையைக் குறைத்துவிடுகின்றன. உடல்சார் தண்டனைகள் பிள்ளைகளிடையே பரந்ததும் நீடித்ததுமான எதிர்மறையான விளைவுகளைத் தோற்றுவித்துவிடுகின்றன.

Giles (2015) என்பவர் மேற்கொண்ட ஆய்வின் முடிவாக பின்வரும் விடயங்களை கண்டறியப்பட்டன..

- ❖ வலுவூட்டல் தொடர்ந்து திட்டமிட்ட படி வழங்க வேண்டும். அவ்வாறு திட்டமிட்டு வழங்காவிடின் பிள்ளையிடத்தே எதிர்பார்த்த நடத்தையைத் தோற்றுவிக்க முடியாது.

- ❖ மீளவலியுறுத்தல் உடனடியாக வழங்கப்படட வேண்டும். தாம் எதற்காக மீளவலியுறுத்தப்படுகிறோம் என்பதனைப் பிள்ளைகள் அறிந்து கொள்ள வேண்டும். உரிய காலத்தில் வழங்கப்படாத மீளவலியுறுத்தலினால் எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைய முடியாமல் போகும். எனவே வாய்மொழி மூலமான மீளவலியுறுத்தலையாவது உடனடியாக வழங்க வேண்டும்.

- ❖ மாணவரினது ஒவ்வொரு செயலையும் மேம்படுத்த, விளைதிறனைக்காண மீளவலியுறுத்தல் அவசியமாகும். எனவே கால தாமதமின்றிய மீளவலியுறுத்தல் மாணவரின் முன்னேற்றத்திற்கு பல வகையிலும் துணைபுரிவதோடு ஆசிரியரின் சிறப்பான செயலாகவும் அமையும்.

- ❖ எதிர்பார்க்கப்படுகின்ற இலக்கை அடையும் வரை மாணவன் தொடந்தும் மீளவலியுறுத்தலுக்குட்படுத்த வேண்டும். அவ்வாறு உற்சாகப்படுத்தும் போது வெற்றியடைந்தால் வெகுமதி வழங்கப்படுமென உறுதியளிப்பதோடு அதனை நிறைவேற்ற வேண்டும்.

- ❖ மீளவலியுறுத்தல் மாணவர்களின் வகுப்பு, கல்விநிலை போன்றவற்றிற்கு தகுந்நதாற் போல் அமைய வேண்டும்.

பிறவுன் (2006) என்பவர் தன்னுடைய ஆய்வில் வகுப்பறைத் திட்டமிடலும் , வகுப்பறைக் கட்டுப்பாடும் கற்றல்- கற்பித்தலில் தர மேம்பாட்டை ஏற்படுத்துவதுடன் வகுப்பறை முகாமைத்துவத்தை இலகுபடுத்தும் எனக் குறிப்பிடுகிறார். வகுப்பறையின் சிறப்பான குறிக்கோள்களை அடையவும், அடைவ மட்டத்தினை அதிகரிக்கவும் வகுப்பறை முகாமைத்துவம் துணைபுரிகிறது என்கிறார்.

‘‘வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பான ஆய்வுகள் கல்வியின் உட்குறிப்புக்களால் கல்வி உளவியலின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றன. ஆசிரியர்கள் தமது வகுப்பறை நடவடிக்கைகள் மற்றும் நடத்தைகளை நன்கு திட்டமிட்டு ஒழுங்கமைக்க வேண்டும். குழுசார்ந்த அணுகுமுறை, கூட்டுக்கற்றல், விஷேடதேவையுடைய மாணவர்கள் தொடர்பான அம்சம் போன்ற விடயங்களை ஆசிரியர்கள் தமது வகுப்பறை முகாமைத்துவத்தில் கவனத்தில் கொள்ள வேண்டும்’’ என முடிவினை வெளியிட்டனர் (எட்முன்ட் மற்றும் உராவும் , 2010).

“வகுப்பறைச் செயற்பாடுகளில் விமரச்ன ரீதியான செயற்பாடுகளுக்கு ஆசிரியர் இடமளித்தல் வேண்டும். மாணவர்களிடம் அதிகமான கேள்விகளைக் கேட்டு ஆசிரியர் குறைவாகப் பேச வேண்டும். இருவழித் தொடர்பாடல் என்பது மாணவர்களின் விருத்திக்கு அவசியமாகும் (Giles, 2015)”.

குடும்பம் ஒரு சமூக நிறுவனம் என்ற வகையில் பிள்ளைகளை கற்றலுக்கு தூண்டுவதும், பராமரித்தலும் அதன் பிரதான பணியாகும். அதனால் குடும்பம் கற்றலில் அதிகம் தொடர்பு கொண்டதாகக் கருதப்படுகின்றது. குடும்ப உறுப்பினராகுவதற்கும், சமூக உறுப்பினராக தகைமை பெறுவதற்கும் ஒருவருக்கு வேண்டிய அறிவை குடும்பம் வழங்குகிறது.. சமூகத்தின் நிலைப்பிற்கும் ஒழுங்கிற்கும் அடிப்படையானதாகவும் மக்களின் வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதாகவும் முதன்மையான முகவர்களில் குடும்பம் முக்கிய பங்காற்றுகின்றன (Giles, 2015).

Parents-child Relationship and Adjestment in Adolescene எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பிள்ளைகளுடன் நெருங்கிய தொடர்பு பேணும்போது அவர்கள் தங்கள் பெற்றோர்களை எதிர்க்க மாட்டார்கள். இந்நெருங்கிய தொடரப்பானது பெற்றோர்கள் எப்போதும் தங்களை கவனிக்கிறார்கள் என்ற எண்ணத்ததை உருவாக்கும். எனவே பிள்ளைகள் வளரும் போது தேவையற்ற மனிதர்களிடம் தொடர்பு வைப்பதனைக் குறைப்பார்கள். அத்துடன் கற்றலில் அதிக கவனமும் செலுத்துவார்கள் (Doyle and Moretti, 2004).

**ஆய்வு முறையியலும் வடிவமைப்பும்**

அளவைநிலை ஆய்வுமுறை இவ்வாய்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட ஆய்வுக்கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல், அவதானம், என்பன அமைந்துள்ளன. இவ்வாய்வில் அளவு மற்றும் பண்பு ரீதியான தரவுகள் சேகரிக்கப்பட்டன.

**மாதிரித்தெரிவு**

**அட்டவணை 01: மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அதிபர்களின் விபரம்.**

| மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் | | மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் | மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் | மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட அதிபர்கள் |
|---|---|---|---|---|
| A | 1C | 18 | 5 | 1 |
| B | 1C | 17 | 5 | 1 |
| C | 1C | 12 | 5 | 1 |


ISBN 978-624-5736-14-0


| | | | | |
|---|---|---|---|---|
| D | Type 3 | 7 | 1 | 1 |
| E | Type 3 | 46 | 4 | 1 |
| **மொத்தம்** | | **100** | **20** | **05** |

**தரவுப்பகுப்பாய்வும் வியாக்கியானமும்**

இவ்வாய்வானது பொது நோக்கத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கங்களுக்கங்களினடிப்படையில் உருவாக்கப்பட்ட ஆய்வு வினாக்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்கொத்து, நேர்காணல், மற்றும் அவதானம் போன்ற ஆய்வுக் கருவிகளின் துணையுடன் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பெறப்பட்ட தரவுகள் புள்ளிவிபரவியல் அடிப்படையிலும் பண்பு ரீதியிலும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு பெறப்பட்ட தரவுகள் Microsoft Exel முறையைப் பயன்படுத்தி சலாகை வரைபுகள், வரைபுகள், முப்பரிமாண வரைபடம் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.


Bouville (2008) என்பவரது, தண்டனை தொடர்பாக மேற்கொண்ட ஆய்வின் முடிவுகள் பின்வருமாறு அமைந்திருந்தது. தண்டனை ஒரு அறிவியல் சார்ந்த முறையாக கருதப்படவில்லை. தண்டனை அறிவியல் நடத்தைக்கு எதிரானதாக காணப்படுவதாக ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் தண்டனையின் அவசியம் தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் வினவிய போது அவர்கள் அளித்த பதில்கள் பின்வருமாறு உருவில் காட்டப்பட்டுள்ளது.




**உரு 1: தண்டணையின் அவசியம் தொடர்பான ஆசிரியர், மாணவர்களின் நிலை**

மேற்படி வரைபின் படி, 74 சதவீதமான ஆசிரியர்கள் தண்டனை மாணவர்களுக்கு அவசியம் எனவும் 26 சதவீதமான ஆசிரியர்கள் தண்டனை மாணவர்களுக்கு அவசியமில்லை எனவும் குறிப்பிட்டிருந்தனர். அதே வேளை மாணவர்களிடம் இது தொடர்பாக வினவப்பட்ட போது 100 சதவீதமான மாணவர்கள் தேவையில்லை என்றும் குறிப்பிட்டிருந்தனர். மேலும் தண்டனை வழங்கிய பின்னர் மாணவர்களுக்கு ஏற்படும் மனோநிலை தொடர்பாக மாணவர்களிடம் வினவிய போது அவர்கள் அளித்த பதில்கள் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.




**உரு 2: தண்டணை வழங்கிய பின் ஆசிரியர் மீது மாணவர்களின் நிலை**

மேற்படி தரவுகளின்படி, 35 சதவீதமானவர்கள் ஆசிரியர்கள் மீது வெறுப்பு ஏற்படுவதாகவும், 20 சதவீதமானவர்கள் தண்டனையை அவமானமாகக் கருதுவதாகவும், 31 சதவீதமான மாணவர்கள் கவலை ஏற்படுவதாகவும், 14 சதவீதமானவர்கள் சக மாணவர்கள் மீது கோபம் ஏற்படுவதாகவும் பதிலளித்துள்ளனர். மாணவர்களின் கற்றலை வினைத்திறன்கொண்டதாக மாற்றியமைப்பதற்காக மாணவர்களுக்கு தண்டணை வங்குவது அவசியமானதா என ஆசிரியர்களிடம் வினவப்பட்ட போது 24 சதவீதமான ஆசிரியர்கள் ஆம் எனவும் 76 சதவீதமான ஆசிரியர்கள் இல்லை எனவும் பதிலளித்தனர். ஆம் எனப் பதிலளித்த ஆசிரியர்களும் இல்லையெனப் பதிலளித்த ஆசிரியர்களும் அதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என அளித்த பதில்கள் பின்வருமாறு அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2: தண்டனை வழங்குவது அவசியம்**

| **மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள்** | **சதவீதம்** |
|---|---|
| பொறுப்புக்களை வழங்கல் | 20% |
| காலைக் கூட்டங்களை நடாத்தவும், நற்சிந்தனைகளை கூறவும் செய்தல். | 25% |
| பூக்கன்றுகளை நாட்டி பராமரிக்க விடல | 14% |
| பெற்றோருடன் கலந்துரையாடுதல் | 11% |
| பாடசாலைச் சூழலை சுத்தம் செய்ய விடல். | 19% |
| பழமொழிகள், குறட்பாக்கள், வாய்ப்பாடுகளை மனனம் செய்வித்தல் | 16% |

**அட்டவணை: 3 தண்டனை வழங்குதல் தவறு**

| மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் | சதவீதம் |
|---|---|
| ஒழுக்கக்கோவையில் கூறப்பட்டுள்ள விடயங்களைத் தெளிவாகக் காட்சிப்படுத்தல் | 34% |
| வழிகாட்டல் ஆலோசனை வழங்கச் செய்தல். | 17% |
| வகுப்பறைக்கும் உரிய சட்டதிட்டங்களை மாணவர்களையே தயாரிக்கச் செய்தல் | 15% |
| முன்மாதிரயான மாணவர்களை பாராட்டல், | 20% |
| பாடசாலையின் சட்டவிதிகளைப் பேணும் மாணவர்களையும பெற்றோரையும் பாராட்டுதல் | 14% |

**முடிவுகளும் கலந்துரையாடலும்**

**மாணவர்களின் வினைத்திறனான கற்றல் விருத்தியில் மீளவலியுறுத்தலின் செல்வாக்கு**

மாணவர்கள் அனைவரும் ஒரே வகையான திறமையைக் கொண்டவர்கள் அல்லர். வேவ்வேறுபட்ட திறன்களைதாங்கி பாடசாலைக்கு வருகை தரும் அவர்களின் திறன்களை இனங்கண்டு அவர்களிளை சமூக பொருத்தப்பாடு கொண்டவர்களாக மாற்றியமைக்க வேண்டியது பாடசாலையிச் சமூகத்தின் தலையாய பணியாகும். மாணவர்களின் கற்றல் விருத்தியில் மீளவலியுறுத்தலின் செல்வாக்கானது ஆய்விற்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் பின்வருமாறு காணப்பட்டன. தனியாள் தேவைகளை இனங்கண்டு ஆசிரியர்கள் கற்பித்தலை மேற்கொள்ளல் திருப்பதிகரமான நிலையில் காணப்பட்டது. அதாவது மாணவர்களின் நிலைகளுக்கு ஏற்றவாறு ஆசிரியர்கள் தமது கற்பித்தலை மேற்கொள்கின்றனர். அத்தோடு உரிய காலத்தில் பாடத்திட்டங்கள் நிறைவு செய்யப்படுவதும் பாடங்கள் நேரஅட்டவணைப்படி நடைபெறல் 72 வீதமான மாணவர்கள் தமக்கு உரியநேரப்படி பாடங்கள் நடைபெறுவதாகக் குறிப்பிட்டுள்ளதோடு ஆசிரியர்கள் தம் மீது அதிக கரிசணையுடன் செயற்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

பாடவேளையின் இறுதியில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல் - 66 சதவீதமான மாணவர்கள் ஒவ்வொருநாளும் பாடவேளையின் இறுதியில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பாக அதிருப்தி நிலையினை வெளிப்படுத்தினர். அதற்கான காரணங்களை ஆசிரியர்களிடம் வினவிய போது அதிகரித்த மாணவர் தொகை மற்றும் வளப்பற்றாக்குறை மற்றும் நேரம் போதாமை காரணமாக மாணவர்களினை ஒவ்வொரு நாளும் பாடவேளை முடிவின் போது மதிப்பிட முடியாதுள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

பாடப்பிரவேசம் - 56 வீதமான மாணவர்கள், ஆசிரியர்கள் மேற்கொள்ளும் பாடப்பிரவேசம் தமக்கு கற்றல் மீது ஆர்வத்தினைத் தூண்டுவதாகக் குறிப்பிட்டுள்ளனர். அதாவது

முன்னறிவை மீட்டல், கதைகூறல், போலச் செய்தல் போன்றவற்றினூடாக தமது கற்றலை ஆரம்பிப்பதோடு அதன் மூலம் தான் மகிழ்ச்சி கரமான கற்றலை அனுபவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

கற்பித்தலில் நவீன துணைச்சாதணங்களின் பயன்பாடு – 12 வீதமான ஆசிரியர்கள் மாத்திரமே கற்பித்தலில் நவீன துனைச்சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர். இதற்கான காரணங்களை ஆசிரியர்களிடம் கேட்டறிந்த போது பாடசாலையின் பௌதீக மற்றும் மானிட வளங்களின் பற்றாக்குறையே மிகப்பிரதானமான காரணமாக அமைந்திருந்ததோடு அதிகமான ஆசிரியர்கள் நவீன தெரினுட்பசாதனங்களை பயன்படுத்துவதற்கான அறிவினைக் கொண்டிராமையும் இதற்கான காரணமாக பெறப்பட்ட தகவல்களில் இருந்து அறிய முடிந்தது.

ஆரியர் - மாணவர் இடைத்தொடர்பு – மாணவர்கள் மற்றும் ஆசரியர்களில் 46 வீதமானவர்கள் ஆசிரியர்கள் தம்முடன் பாகுபாடின்றி தமக்கு விருப்பமான வகையிலும், கற்றலில் ஆர்வத்தினை தூண்டும் வகையிலும் தம்முடன் நடந்து கொள்வதாக குறிப்பிட்டுள்ளதோடு , ஆசிரியர் மாணவர்களுடன் அன்பாகவும், அவர்களிடம் உளத்தொலைவை தவிர்க்கும் வண்ணமும் நடந்து கொள்வதோடு பாடசாலைக்கு வருகைதராமல் உள்ள மாணவர்களின் வீடுகளுக்கு வீடு தரிசிப்புச் செய்து மாணவர்களை பாடசாலைக்கு வருகைதருமாறு ஆலோசனைகளை வழங்குவதாகவும் இவ்வாய்வில் இருந்து அறிய முடிந்தது.

**மீளவலிறுத்தலைப் பொருத்தமான வகையில் பிரயோகிப்பதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்**

மீளவலியுறுத்தலை வழங்குவதில் மாணவர்களின் எண்ணிக்கை சவாலாக அமைதல் - 75 வீதமான அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் கருத்தின் படி இலங்கையில் வகுப்பொன்றில் மாணவர்களின் சராசரியான அளவு 35 மாணவர்களாக காணப்பட்டாலும் ஆய்வுக்குட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களின் தொகை வகுப்பொன்றிற்கு 40-45 வரையாக மாணவர்களின் எண்ணிக்கை காணப்படுகின்றது. அதற்குப் பிரதான காரணம் ஆசிரியர்கள் மற்றும் பௌதீக வளங்களின் பற்றாக்குறை காரணமாக இவ்வாறு அதிகமான மாணவர்களை ஒரு வகுப்பில் இணைத்துக்கொள்ள வேண்டியுள்ளதாக அதிபரிடம் நேர்காணலின் மூலம் அறிய முடிந்தது. இதனால் குறித்த 40 நிமிட பாடவேளையினுள் அனைத்து மாணவர்களுக்கு கற்பித்தலை மேற்கொண்டு அவர்களுக்கு உரியவகையில் மீளவலியுறுத்தலை குறிப்பிட்ட பாடவேளையினுள் வகுங்குவதென்பது சாத்தியமற்றவொன்றாகவே காணப்படுகின்றது. அத்துடன் வகுப்பறை முகாமைத்துவத்தினைப் பேணுவதும் சவால்கள் நிறைந்தவொன்றாகவே காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக என்னுடைய ஆய்வின் முடிவானது மேற்குறிப்பிட்டவாறு காணப்படும் அதேவேளை , 2010 இல் வகுப்பறை முகாமைத்துவமும் கல்வி உளவியலும் தொடர்பாக ஆய்வினை மேற்கொண்ட எட்மன்ட் உம் லவ்ராவும் "வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள் கல்வியின் உட்குறிப்புக்களால் கல்வி உளவியலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. ஆசிரியர்கள் தமது வகுப்பறை நடவடிக்கைகள் மற்றும் நடத்தைகளை


ISBN 978-624-5736-14-0

நன்கு திட்டமிட்டு ஒழுங்கமைக்க வேண்டும். குழுசார்ந்த அணுகுமுறைகள் மற்றும் கூட்டுறவுக் கல்வி நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும். கூட்டுறவுக்கற்றல் நடவடிக்கையானது விஷேடதேவையுடைய மாணவர்களுக்கு நன்மை ஏற்படுத்துவதாக அமைதல் வேண்டும். ஆசிரியர்கள் தமது வகுப்பறை முகாமைத்துவத்தில் இவற்றினை கவனத்தில் கொள்ள வேண்டும்'' எனும் முடிவினை வெளியட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிரியர்கள் சார்பான பிரச்சினைகள்- 65 வீதமான ஆசிரியர்கள் விடுமுறை பெறுகின்றமை பாரிய சவாலாக அமைகிறது. ஏலவே ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற இப்பாடசாலைகளில் ஆசிரியர்கள் அடிக்கடி விடுமுறை பெறுவதானது மாணவர்களது முழுநாளுக்குரிய பாடத்தினையும் இக்கச் செய்வதாக அமைவதோடு, 20 வீதமான ஆசிரியர்கள் தொலைவிலிருந்து பாடசாலைக்கு சமூகமளிப்பதனால் ஏற்படும் பிரச்சினைகள் என்பன அதிகமாக காணப்படுவதோடு ஆசிரியர்களுக்கிடையிலான முரண்பாடுகளிகன் தாக்கம், ஆசிரியர்களின் வேலைத்திட்டம், பாடத்திட்டத்தினை உரிய காலப்பகுதியில் நிறைவு செய்தல் என்பன தொடர்பான பிரச்சினைகள் என்பன குறைவான அளவிலே காணப்படுகிறது.

பாடசாலைகளில் ஆரம்ப பிரிவு வகுப்புக்களில் மாணவர்கள் தமது கவனத்தை தொடர்ந்தும் பேணுவது ஒரு சிரமமான பணியாகக் காணப்படுகிறது . ஆரம்ப பிரிவு மாணவர்கள் குடும்ப சூழலில் இருந்து பாடசாலைக்கு வருகை தந்துள்ள காலப்பகுதியாகையால் தேவைகள், பழக்கவழக்கங்கள், சமூகமயமாதல், இணைந்து கற்றல் போன்ற விடயங்களில் சிரமங்களை எதிர்நோக்குவதோடு உயர்வகுப்பு மாணவர்களைப் போன்று ஆசிரியர்களுடன் இடைத்தொடர்பை பேணுவதானது குறைவாகவே காணப்படும். இதனால் ஆரம்ப பிரிவு மாணவர்களின் கவனத்தைப் பெற்று அவர்களை வினைத்திறனான கற்றல்- கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு ஆசிரியர்கள் தொடர்ந்தும் பேணுவதற்கான பல்வேறு வழிமுறைகளைக் கையாள வேண்டும். (சந்திரசேகரம், 2007).

வளம் சார்ந்த பிரச்சினைகள் -எதிர்பார்க்கப்படும் விளைவுகளை பெற்றுக் கொள்வதற்கு உள்ளீடாக பயன்படுத்தப்படுபவை வளம் எனலாம். இவ்வளங்களானது ஆய்விற்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் 30 வீதத்திற்கும் குறைவான அளவிலேயே காணப்படுகின்றது. அத்துடன் இப்பாடசாலைகள் யாவும் கஷ்ட, அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. ஆய்வின்மூலம் பெறப்பட்ட தகவல்களின் படி இப்பாடசாலைகள் எவற்றிலும் நூலக வசதி,விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், இணைப்பாடவிதான அறைகள் என்பன காணப்படவில்லை. இவ்வாறான நிலையில் மாணவர்களின் கற்றல் மற்றும் இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளை ஊக்குவிக்கவும் மீளவலியுறுத்துவதிலும் பாடசாலைச் சமூகம் பாரிய சவால்களை எதிர்கொள்கின்றது.

**பரிந்துரைகள்**

- பாடசாலையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் வெகுமதி, கணிப்பு, நற்சான்றிதழ்கள் என்பன அவர்கள் செய்யும் செயல்களுக்கு ஏற்ப வழங்கப்படல் வேண்டும். பாடசாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் அதிபர் இம்முறையை நடைமுறைப்படுத்தலாம்.குறிப்பிட்ட பாடத்தில்,குறிப்பிட்டவகுப்பில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் இவை இரண்டும் கவனிக்கப்பட வேண்டியவை.
- மாணவர்களின் செயற்பாடுகளுக்கு தகுந்த பாராட்டுகள், பரிசுகள், கணிப்புகள் , வெகுமதிகள் போன்றவைஆசிரியர்களினால் வழங்கப்படல் கற்றலை விரைவுபடுத்துவதுடன், கற்றவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும் துணையாக அமையும். குறிப்பாக வகுப்பறையில் கற்றல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் முன்னணியில் திகழும் மாணவர்களுக்கு அனைவர் முன்னிலையிலும் பாராட்டி பரிசு வழங்குவதன் மூலம் அவர்களின் செயற்பாடுகள் மேலும் விருத்தியடைய வாய்ப்பாக அமையும். அத்துடன் ஏனைய மாணவர்களும் இதனால் தூண்டப்பட்டு சிறப்பாக செயற்பட முயல்வர். நேர்வலுவூட்டலானது ஒருவருடைய எதிர்கால வாழ்வில் எதிர்கால வாழ்வில் எதிர்கொள்ளவிருக்கும் தவறான நடத்தைகளை தவிர்க்கும் ஆற்றல் மிக்கதாகக் கணிக்கப்பட்டுள்ளது. மாணவர் மட்டத்திலுள்ள திறமைகளை வலுவடையச் செய்யும் , மாணவர்களை ஊக்குவிக்கவும் நேர்மீளவலியுறுத்தல் பயன்படுகிறது. மாணவர்களிடையே தோற்றுவிக்க விளையும் நடத்தைக்கு உடனடியாக வெகுமதி கொடுக்கும் போது அந்நடத்தையானது வலுவடைகின்றது. மீளவலியுறுத்தல் வழங்கும் போது மாணவரின் தகுந்த நடத்தைக்கு உரிய காலப்பகுதியில் அதாவது உடனடியாக வழங்கப்படல் வேண்டும். அத்துடன் அடிக்கடி வழங்கப்படல் அவசியமாகும்.மாணவரின் தனியாள் வேறுபாடு, வயது , நிலை என்பனவும் மீளவலிறுத்தலின் போது கவனிக்கப்பட வேண்டியதாகும்.
- ஒவ்வொரு பாடவேளை முடிவிலும் மாணவர்களுக்கு மதிப்பீட்டு வினாக்கள் வழங்கப்பட்டு, அவர்களது பயிற்சிக்கொப்பிகள் உரிய காலப்பகுதியில் பார்வையிடப்பட்டு திருத்தப்படல் வேண்டும். இதன்போது மிகச்சரியாகவும், விரைவாகவும் பயிற்சிகளை செய்யும் மாணவர்களுக்கு நன்று, மிகநன்று போன்ற வெகுமதிகளை இடலாம்.
- தண்டனையளிக்கும் ஆசிரியர் மனவெழுச்சிகளுக்கு இடமளித்தால் தண்டனை பழிவாங்குவதாக அமைந்துவிடும். தண்டனை மாணவர்களிடையே பயவுணர்ச்சியை ஏற்படுத்தும். சில வேளைகளில் அதே குற்றத்தை ஒரு மாணவன் தீவிரமாக செய்யவும் அது காரணமாகிவிடும். எனவே தண்டனையளிக்கும் ஆசிரியர் நேர்மையுடன் நடப்பதோடு, பிறர் முன்னிலையில் தண்டனையளிப்பதனையும், தூற்றுவதனையும் தவிர்க்க வேண்டும். தமது குற்றத்திற்காகவே ஆசிரியர் தண்டனையளிக்கிறார் என்பதனை உணரும் வகையில் ஆசிரியர் தண்டனையளித்தல் வேண்டும்.
- ஆலோசனை வழிகாட்டல் மூலம் மாணவர்களை வழிப்படுத்த வேண்டும். மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு சரியான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, பாடசாலையில் ஒழுக்கக் கட்டுப்பாட்டுக் குழுவை உரிய வகையில் நடைமுறைப்படுத்தல்

அவசியமாகும்.ஒழுக்க விழுமியங்களையும் பாடசாலையின் சட்டதிட்டங்களையும் மீறுவதால் ஏற்படும் கேடுகளை காலை ஆராதனைகளில் உரையாற்றல். மற்றும் முன்மாதிரியான மாணவர்களை பாராட்டல்.

- வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்க முன்னர் மாணவர்களுடன் சிறிது நேரம் கலந்துரையாடி அறிவுரைகளை வழங்குதல் வேண்டும் அத்துடன் ஆசிரியர்களின் செயற்பாடுகள் முன்மாதிரியாக அமைதல் சிறப்பாகக் கொள்ளப்படுகிறது. பாடசாலையின் சட்டதிட்டங்கள், ஒழுக்க விழுமியங்களை பின்பற்றாத மாணவர்களுக்கு வகுப்புத்தலைவர் மற்றும் பாடசாலையின் சட்டதிட்ங்கள் சார்ந்த பொறுப்புக்களை வழங்கல்.
- மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்ப செயன்முறை சார்ந்த கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும். இதனால் மாணவர்கள் செயற்பாடுகளில் அவதானத்துடன் ஈடுபட்டு கற்றலில் கவனத்துடனும், அக்கறையுடனும் ஈடுபட வழிவகுக்கும்.
- மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கமைய கற்பித்தல் முறைகளை ஆசிரியர் பின்பற்ற வேண்டும். மாணவர்களை விருப்புடன் கற்றலில் ஈடுபடச் செய்வதற்கு போலச் செய்து கற்பித்தல், திறந்த வகுப்பறை முறைகள் போன்றவற்றை பின்பற்ற வேண்டும்.
- வகுப்பறை கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்த போதியளவு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். மாணவர்களிடம் காணப்படும் தனித்துவமான திறன்களை ஆசிரியர்கள் இனங்கண்டு கொள்ள வேண்டியது அவசியமாகும்.
- தூர இடத்து ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தன்மைகளுக்கு அமைவாக அவர்களுக்குத் தேவையான தங்குமிட வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதும், போக்குவரத்திற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.விடுமுறை பெறும் ஆசிரியர்களுக்கு பதிலாக பதிற்கடமைகளுக்காக தொண்டர் ஆசிரியர்களை ஒழுங்கு செய்தல். அத்துடன் ஆசிரியர்களின் விடுமுறை தொடர்பாக முன்னரே தெரிவிக்கச் செய்தல் வேண்டும்.
- பற்றாக்குறையாகவுள்ள வளங்களை தொண்டு நிறுவனங்கள், தனவந்தர்கள், கிராமசேவகர்கள், பழைய மாணவர்கள் சங்கம் போன்றவற்றை அணுகி உண்மை நிலையை துல்லியமாகவும் தெளிவாகவும் எடுத்துரைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.
- பல்கலைக்கழக, கல்வியற்கல்லூரி மாணவர்கள் போன்றோரை தெரிவு செய்து அவர்களை பயிற்றுவிப்பாளர்களாகச் செயற்படுமாறு அழைப்பு விடுத்தல்.
- பாடத்திட்டத்தினை முழுமையாக நிறைவு செய்வதற்காகப் பிரத்தியோக வகுப்புகளை நடாத்தல் அவசியமாகிறது. பொருளாதார பின்னடைவுள்ள மாணவர்களுக்கு நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் முக்கியமாகும், சிறப்பாக செயற்படும் மாணவர்களுக்கு பாராட்டுக்களை வழங்கல் , பரிசளிப்பு விழாக்களை நடாத்தல் இன்றியமையாததாகும். ஆசிரியர்களை பாராட்டி ஊக்குவித்தலானது மாணவர்களுக்கு வினைத்திறனாக கற்பிப்பதற்கான மனநிலையை உருவாக்குகிறது. வளவாளர்களைக் கொண்டு கருத்தரங்குகளை நடாத்தல் அவசியமாகும். மாணவர்களின்

சுயஊக்கத்தையும், தன்னார்வத்தையும் விருத்தி செய்வதற்கான ஊக்குவிப்புக்களை வழங்கல் மாணவர்களின் அடைவை அதிகரிக்கும். போட்டிகளை நடாத்தி வெற்றி பெறுபவர்களுக்கு உடனுக்குடன் பரிசில்கள், சான்றிதழ்களை வழங்கல் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடத் தூண்டுதலாக அமைகிறது.

**முடிவுரை**

எனது ஆய்வு முடிவுகளின் படி, ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வினைத்திறனான கற்றல் விருத்தியில் மீளவலியுறுத்தல் அதிகம் செல்வாக்குச் செலுத்துகிறது. ஆரம்பப்பிரிவு மாணவர்களை கல்வியில் உரியவாறு அடித்தளமிடவும் அடுத்த கட்ட நகர்விற்கும் மீளவலியுறுத்தல் உரிய வகையில் உரிய காலப்பகுதியில் வழங்குவது அவசியமாகும். மாணவர்களுக்கு உரியவாறு மீளவலியுறுத்தல்கள் வழங்காதுவிடின் கற்றல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஆர்வமின்மை, தனியாள் திறன் வெளிக் கொணரமுடியாமை, கற்றலில் தேவையுடைய மாணவர்களுக்கு பரிகாரங்களை அடைந்து கொள்ள முடியாமை போன்றன ஏற்படுகின்றன. எனவே, மாணவர்கள் கற்றல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தொடர்ந்தும் தமது திறன்களை வெளிப்படுத்தவும், கற்றல் இயலாமை கொண்ட மாணவர்களை கற்றலின்பால் தொடர்ந்தும் வழிகாட்டவும் மீளவலியுறுத்தல் அவசியமானதாகும்.

**உசாத்துணைகள்**


Amutan, K. (2014). A Review of B. F. Skinner's 'Reinforcement Theory of Motivation. *International Journal of Research in Education Methodology*, 680–688. https://www.researchgate.net/publication/306091479_A_Review_of_B_F_Skinner's_'Reinforcement_Theory_of_Motivation

Baron, A., & Galizio, M. (2005). Positive and negative reinforcement: Should the distinction be preserved? *The Behavior Analyst*, *28*(2), 85–98. https://doi.org/10.1007/bf03392107

Baumrind, D., Larzelere, R. E., & Cowan, P. A. (2002). Ordinary physical punishment: Is it harmful? Comment on Gershoff (2002). *Psychological Bulletin*, *128*(4), 580–589. https://doi.org/10.1037/0033-2909.128.4.580

Blume, A. W., Schmaling, K. B., & Marlatt, G. A. (2000). Revisiting the self-medication hypothesis from a behavioral perspective. *Cognitive and Behavioral Practice*, *7*(4), 379–384. https://doi.org/10.1016/s1077-7229(00)80048-6

Bouville, M. (2008). Crime and punishment in scientific research. *Agency for Science, Technology and Research*, 1–13.

https://citeseerx.ist.psu.edu/viewdoc/download?doi=10.1.1.313.8175&rep=rep1&type=pdf

Collins, M. M., Fontenelle, D. H., & Murdock, J. Y. (2000). *Changing Student Behaviors*. Wellness Institute, Incorporated.

Daniels, A. S., Bergeson, S., Fricks, L., Ashenden, P., & Powell, I. (2012). Pillars of peer support: advancing the role of peer support specialists in promoting recovery. *The Journal of Mental Health Training, Education and Practice*, *7*(2), 60–69. https://doi.org/10.1108/17556221211236457

Doyle, A. B., & Moretti, M. M. (2004). Parent-Child Relationships and Adjustment in Adolescence : Findings from the HBSC Cycle 3 and NLSCY Cycle 2. *Technical Report to Division of Childhood and Adolescence*, *Public Health Agency of Canada*. Published. https://www.researchgate.net/publication/242230023_Parent-Child_Relationships_and_Adjustment_in_Adolescence_Findings_from_the_HBSC_Cycle_3_and_NLSCY_Cycle_2_Studies

Gershoff, E. T. (2002a). Corporal punishment by parents and associated child behaviors and experiences: A meta-analytic and theoretical review. *Psychological Bulletin*, *128*(4), 539–579. https://doi.org/10.1037/0033-2909.128.4.539

Gershoff, E. T. (2002b). Corporal punishment, physical abuse, and the burden of proof: Reply to Baumrind, Larzelere, and Cowan (2002), Holden (2002), and Parke (2002). *Psychological Bulletin*, *128*(4), 602–611. https://doi.org/10.1037/0033-2909.128.4.602

Giles, T., de Lacey, S., & Muir-Cochrane, E. (2016). Factors influencing decision-making around family presence during resuscitation: a grounded theory study. *Journal of Advanced Nursing*, *72*(11), 2706–2717. https://doi.org/10.1111/jan.13046

Iwata, B. A. (1987). Negative reinforcement in applied behavior analysis: an emerging technology. *Journal of Applied Behavior Analysis*, *20*(4), 361–378. https://doi.org/10.1901/jaba.1987.20-361

*Reinforcement Theory*. (2011, October 13). Harvard Gazette. https://news.harvard.edu/gazette/story/2011/10/reinforcement-theory/